## விண்ணப்ப படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் அறிவுறுத்தல்களை வாசித்த பின்னர் விண்ணப்ப படிவத்தினை நிரப்பவும்:

01. **கற்கைநெறிகளைத் தெரிவு செய்தல்**

மாணவர்கள் தங்களது கற்கைநெறிக்கு ஏற்ப பொருத்தமான விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

கலைமாணி கற்கைநெறியினை தெரிவு செய்யும் மாணவர்கள் கலைமாணிக்கான விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

வியாபார நிருவாகமாணி, வர்த்தகமாணி கற்கைநெறியைத் தெரிவு செய்யும் மாணவர்கள் தங்களது தெரிவு முன்னுரிமைக்கு ஏற்ப அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும்.

வியாபார நிருவாகமாணி கற்கைநெறியை முதலாவது தெரிவாகக் கொள்ளும் மாணவர்கள் உரிய இடத்தில் "**A**" எனவும் இரண்டாவது தெரிவு வர்த்தகமாணி கற்கை நெறியாகவிருப்பின் "**B**" எனவும் இடவேண்டும். அதேபோன்று வர்த்தகமாணி கற்கைநெறியை முதலாவது தெரிவாகக் கொள்ளும் மாணவர்கள் உரிய இடத்தில் "**A**" எனவும் இரண்டாவது தெரிவு வியாபார நிருவாகமாணி எனின் "**B**" எனவும் இடவேண்டும்.

இரண்டு கற்கைநெறிக்கான தெரிவுகளையும் பூரணப்படுத்திக் கொள்வதன் மூலம் ஏதாவதொரு கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம்.

02. **விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம்**

விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம் ரூபா 1,500.00 ஆகும். இதனை ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற Pay-In-Voucher (PIV) மூலம் செலுத்தி வங்கியினால் மீள் அச்சடிக்கப்பட்ட (Reprint) அதன்பிரதியை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டவும். அத்துடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா. 8.00 பெறுமதியான அஞ்சல் அட்டையை விண்ணப்பத்துடன் அனுப்புவதன் மூலம் விண்ணப்பம் கிடைத்ததனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

03. **கட்டண விபரம்**

| **கட்டண விபரம்** | **தொகை (Rs.)** |
|---|---:|
| விண்ணப்ப செயற்படுத்தல் | 1,500.00 |
| முதலாம் வருடம் | 40,000.00 |
| இரண்டாம் வருடம் | 30,000.00 |
| மூன்றாம் வருடம் | 20,000.00 |
| **மொத்தம்** | **91,500.00** |

(இக்கற்கை நெறிக்கட்டணமானது கருத்தரங்கு, தொடர்மதிப்பீடு, பருவபப் பரீட்சை, கையேடு, பதிவுப்புத்தகம் போன்ற அனைத்து வகையான கட்டணங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது)

04. **மாணவர்கள் தெரிவு**

உரிய கற்கைநெறிக்கான மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாகும். அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில், அக்கற்கைநெறிக்கான மாணவர்களின் தெரிவு ஒரு பொதுப் பரீட்சையின் மூலம் தீர்மானிக்கப்படும் (மொழி அறிவு, பொது அறிவு மற்றும் உளச்சார்பு)

கற்கைநெறிகள் யாவும் தமிழ்மொழி மூலம் நடைபெறும்.

உதவிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பதிவாளருக்காக